


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.08.2023) தலைமைச் செயலகத்தில், வனத்துறை சார்பில் நீலகிரி மாவட்டம், தெப்பக்காடு யானைகள் முகாமில் முதல் பெண் காவடியாக (யானை பராமரிப்பாளர்) நியமிக்கப்பட்டுள்ள திருமதி வி.பெள்ளி அவர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்த நிகழ்வின்போது, வனத்துறை அமைச்சர் மரு.மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு மற்றும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, திருமதி பெள்ளி அவர்களின் கணவரும் யானை பராமரிப்பாளருமான பொம்மன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (2.8.2023) தலைமைச் செயலகத்தில், தடகள விளையாட்டு வீரர் டி.செல்வபிரபு, டிரிப்பிள் ஜம்ப் தடகள போட்டியில் 20–வது தேசிய ஜூனியர் ஃபெடரேஷன் கோப்பை 2022 போட்டியில் தங்கப் பதக்கம், 4–வது கேலோ இந்தியா இளைஞர் போட்டியில் தங்கப் பதக்கம், இருபது வயதிற்குட்பட்டோருக்கான உலக சாம்பியன்ஷிப் கலி கொலம்பியா 2022 போட்டியில் வெள்ளிப் பதக்கங்கள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வென்றதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, செல்வபிரபுவின் பெற்றோர் ஆகியோர் உள்ளனர்.

### மகத்தான சாதனை புரிந்த – முதல் பெண் மேஜர் ஜெனரல்

# இக்னேசியஸ் டெலாஸ்க்குப் பாராட்டுகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, ஆக.3-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் பாவேந்தர் பாரதிதாசனின் வரிகளை மேற்கோள் காட்டி மேஜர் ஜெனரல் இக்னேசியஸ் டெலாஸ் புளோரா அவர்களுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

**பெண்களால் முன்னேறக் கூடும் – நம் வண்தமிழ் நாடும் எந்நாடும்!**

**மேஜர் ஜெனரல் இக்னேசியஸ் டெலாஸ் புளோரா அவர்களின் மகத்தான சாதனைக்குப் பாராட்டுகள். தமிழ்நாட்டில் இருந்து முதல் பெண் மேஜர் ஜெனரலாக அவர் உயர்ந்திருப்பது சிறப்பான மைல்கல்லாகும். அவரது அபாரமான பணிக்கும், சேவைக்கும், ஆர்வத்துக்கும் எனது வணக்கங்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

# குடியரசுத் தலைவருடன் சந்திப்பு!

... முதல் பக்கத் தொடர்ச்சி

குடியரசுத்தலைவரை சந்தித்தோம்/ மணிப்பூர் வன்முறை தொடர்பான முழு விபரங்களையும் குடியரசுத்தலைவரிடம் தெரிவித்தோம்.

இப்பிரச்சினை தொடர்பாக மக்களவையில் ஒத்தி வைப்பு தீர்மானம் கொண்டு வருகிறோம். மாநிலங்களவையில் பிரிவு 267ன் கீழ் தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்க கோரி வருகிறோம்.

ஆனால் அரசு இரு அவைகளிலும் அதனை ஏற்காமல் நிராகரித்து வருகிறது.

மணிப்பூரில் மெய்த்தி, குக்கி சமூக மக்கள் இடையே வன்முறை நடந்து வருகிறது. அங்கு அமைதி திரும்ப பிரதமர் மோடி நேரடியாக மணிப்பூர் செல்ல வேண்டும்.

நாடாளுமன்றத்தில் அவர் விளக்கம் அளிக்காமல் பல்வேறு இடங்களுக்கும் சென்று உரையாற்றி வருவது வேதனைக்குரியது.

நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் இல்லாத நிலை உருவாகி உள்ளது. மணிப்பூர் விவாகரத்துக்கு தீர்வுகாண குடியரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்துள்ளோம். மாநிலங்களவையில் விதி எண் 267ன் கீழ் விவாதம் நடந்த எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றனர். விதி எண் 267ன் கீழ் விவாதம் நடத்த ஆளுங்கட்சியினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். மணிப்பூர் குறித்து விவாதிக்க மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

**கலவரத்துக்கு காரணமானவர்களை தண்டிக்க வேண்டும்!**

மணிப்பூர் அமைதியை நிலைநாட்ட குடியரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த 3 மாதங்களாக நடைபெற்ற கலவரத்துக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். மணிப்பூரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒன்றிய, மாநில அரசு உதவி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மல்லிகார்ஜுன கார்கே கூறினர்.

### இன்று சுதந்திரப் போராட்ட வீரர்

# தீரன் சின்னமலை நினைவு நாள்: சிலைக்கு முதல்வர் மரியாதை!

சென்னை, ஆக. 3-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன்சின்னமலை அவர்களின் நினைவுநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன்சின்னமலை அவர்களின் நினைவுநாளை முன்னிட்டு, இன்று (03.08.2023) காலை 9.45மணியளவில் சென்னைகிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளார்கள்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன்சின்னமலை அவர்கள் திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் அருகேயுள்ள மேலப்பாளையம் எனும் ஊரில் ரத்தினசாமி கவுண்டர் - பெரியாத்தா தம்பதியினருக்கு 17.04.1756 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் தீர்த்தகிரி கவுண்டர். தீரன்சின்னமலை அவர்கள் இளம்வயதிலேயே சிலம்பாட்டம், வாள்பயிற்சி, வில்பயிற்சி, மல்யுத்தம், தடிவரிசை உள்ளிட்ட பல பயிற்சிகளை கற்று சிறந்த வீரராக திகழ்ந்தார்.

கொங்கு நாட்டை மைசூர் மன்னர் ஆட்சி புரிந்ததால் கொங்குநாட்டு வரிப்பணம் சங்ககிரி வழியாக மைசூர் மன்னருக்குச் சென்றது. இத்தகவலை அறிந்த தீரன்சின்னமலை மைசூர் மன்னருக்குச் செல்லும் வரிப்பணத்தைப் பெற்று ஏழைகளுக்கு வழங்கினார். வரிகொண்டு சென்ற தண்டல்காரர்களிடம் 'சென்னி மலைக்கும் சிவன் மலைக்கும் இடையே சின்னமலை பறித்ததாகச் சொல்' என்று கூறியதால் அன்று முதல் 'சின்னமலை' என்ற பெயர் பெற்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டார். தீரன் சின்னமலை அவர்கள் ஆன்மிக பணிகளில் சிறந்து விளங்கிய காரணத்தினால் திருக்கோவில்களுக்குப் பல்வேறு திருப்பணிகள் செய்வதில் ஆர்வம் காட்டினார். மேலும் தமிழ்புலவர் பெருமக்களையும் ஆதரித்துவந்தார்.

ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிப்படையினர் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுத்திட தொடர்ந்து போரிட்டு 1801ஆம் ஆண்டு ஈரோடு காவிரிக் கரையிலும், 1802ஆம் ஆண்டு ஓடாநிலையிலும், 1804 ஆம் ஆண்டு அரச்சலூரிலும் ஆங்கிலேயருடன் நடைபெற்ற போர்களில் தீரன்சின்னமலை அவர்கள் மாபெரும் வெற்றி பெற்றார். தீரன்சின்னமலை அவர்களைப் போரில் வெல்ல முடியாது என்பதை உணர்ந்த ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி மூலம் அவரைக் கைது செய்து போலி விசாரணை நடத்தி 31.07.1805 அன்று சங்ககிரிக் கோட்டையில் தூக்கி லிடப்பட்டார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன்சின்னமலை அவர்களின் வீரதீரத்தினையும், தியாகத்தையும் சிறப்பிக்கும் வகையில், சென்னை கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின்கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கும், சேலம் மாவட்டம் சங்ககிரிக் கோட்டையில் தீரன் சின்னமலை தூக்கிலிடப்பட்ட இடத்திலும், அவர்களின் நினைவுத்தூண் அமைந்துள்ள இடத்திலும் அன்னார் அவர்களின் நினைவினைப் போற்றும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளைப் போற்றுகின்ற வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் இன்று (03.08.2023) காலை 9.45 நடைபெறும் நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

# தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

... முதல் பக்கத் தொடர்ச்சி

***வருகிற 17.8.2023 (வியாழக்கிழமை) அன்று இராமநாதபுரம், தேவிப்பட்டினம் சாலை, பேராவூர் என்ற இடத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.***

தென் மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 19 கழக மாவட்டங்களின், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தத்தமது மாவட்டங்களுக்குட்பட்ட 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) கூட்டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

***1.இராமநாதபுரம், 2.சிவகங்கை, 3. திண்டுக்கல் கிழக்கு, 4.திண்டுக்கல் மேற்கு, 5.தேனி வடக்கு, 6.தேனி தெற்கு, 7.மதுரை மாநகர், 8.மதுரை வடக்கு, 9. மதுரை தெற்கு, 10.விருதுநகர் வடக்கு, 11. விருதுநகர் தெற்கு, 12.திருநெல்வேலி கிழக்கு, 13.திருநெல்வேலி மத்திய, 14. தென்காசி வடக்கு, 15.தென்காசி தெற்கு, 16.தூத்துக்குடி வடக்கு, 17.தூத்துக்குடி தெற்கு, 18. கன்னியாகுமரி கிழக்கு, 19. கன்னியாகுமரி மேற்கு,***

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் அறிவித்துள்ளார்.

### ஏழை எளியோர்களை கடுமையாக பாதிக்கும் அத்தியாவசிய பொருட்களின்

# விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் ஆ.ராசா கேள்வி !

புதுடெல்லி, ஆக. 3-

ஏழை எளிய மக்களின் அன்றாட வாழ்க்கையை கடுமையாக பாதிக்கும் அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மக்களவையில் கேள்வி எழுப்பினார்.



அது பற்றிய விபரம் வருமாறு :-

(அ) அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களின் விலை குறிப்பாக, காய்கறிகள், பழங்கள், பருப்பு வகைகள், கடுகு எண்ணெய், தானிய வகைகள், பால், கோதுமை, மாவு வகைகள், தக்காளி ஆகியவற்றின் விலை கடந்த இரண்டு ஆண்டுகளில் உயர்ந்துள்ளனவா,

(ஆ) அப்படியானால், அது பற்றிய விவரங்களும், அதற்கான காரணங்களும் என்ன என்று தெரிவிக்கவும்,

(இ) 2014-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை ஒப்பிடுகையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி என்பது 200 சதவீதம் முதல் 800 சதவீதம் வரை உயர்ந்து விட்டதை ஒன்றிய அரசு கவனத்தில் கொண்டுள்ளதா,

(ஈ) அப்படியானால், அது குறித்த விவரங்கள் யாவை,

(உ) அதிகப்படியான பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சாமானிய மக்களுக்கு நிவாரணம் அளிக்கவும், பொருளாதார நிலைமையை வலுப்படுத்தவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள அல்லது எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை ?

இவ்வாறு ஆ.ராசா கேள்வி எழுப்பினார்.

மேற்கண்ட கேள்விகளுக்கு பதிலளித்த ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சவுத்ரி எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் வருமாறு :-

(அ) மற்றும் (ஆ): நிர்ணயிக்கப்பட்ட விலை கண்காணிப்பு மையங்கள் மூலம் 22 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை நிலவரத்தை அரசாங்கம் கண்காணித்து வருகிறது. 2021 (ஏப்ரல்-ஜூலை), 2022 (ஏப்ரல்-ஜூலை) மற்றும் 2023 (ஏப்ரல்-ஜூலை 1 முதல் ஜூலை 25 வரை) காலகட்டத்தில் 22 அத்தியாவசிய பொருட்களுக்கான இந்திய அளவிலான சில்லறை விலைகள் இணைப்பாக அளிக்கப்பட்டுள்ளது. இந்த பொருட்களில் பழங்கள் குறிப்பிடவில்லை. நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி பழங்களின் விலையில் ஏற்பட்ட பணவீக்க விகிதம் 2022 (ஏப்ரல்-ஜூன்) மற்றும் 2023 (ஏப்ரல்-ஜூன்) காலகட்டத்தில் முறையே 3.47 சதவீதம் மற்றும் 1.40 சதவீதமாக இருந்தது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை என்பது தேவை மற்றும் விநியோகத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு, பருவநிலை, விநியோக சங்கிலி கட்டுப்பாடுகள், சர்வதேச விலை உயர்வு போன்ற பல காரணிகளால் பாதிக்கப்படுகின்றன. சில நேரங்களில், விநியோக சங்கிலியில் ஏற்படும் இடையூறுகள் அல்லது பலத்த மழையால் சேதம் ஏற்படுவதால், வேளாண் மற்றும் தோட்டக்கலை பொருட்களின் விலை உயர்ந்து விடுகிறது.

(இ) மற்றும் (ஈ): மேற்கூறிய 22 அத்தியாவசியப் பொருட்களில் எதுவும் அவற்றின் சராசரி இந்திய அளவிலான சில்லறை விலையில் 25-07-2014 முதல் 25-07-2023 வரை 200 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் ஒட்டுமொத்த விலை அதிகரிக்கவில்லை. துவரம் பருப்பு, கடலை எண்ணெய், தக்காளி தவிர மற்ற அனைத்து பொருட்களின் விலை உயர்வின் ஆண்டு கூட்டு சராசரி வளர்ச்சி விகிதம் (சி.ஏ.ஜி.ஆர்) என்பது 6 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. ஜூலை 2023 காலகட்டத்தில் தக்காளி விலை அதிகரிப்பு என்பது பயிருக்கான பருவகாலம், பிராந்தியம் சார்ந்த பயிர் நோய், வடமாநிலங்களில் முன்னதாகவே தொடங்கிய பருவ மழை மற்றும் ஆங்காங்கே பெய்த பலத்த மழை மற்றும் தளவாட இடையூறுகள் காரணமாக இருந்தன. அதிக இறக்குமதி இருந்தபோதிலும், உற்பத்தி குறைவாக இருந்ததால் துவரம் பருப்பு விலை அதிகரித்தது.

(உ): உள்நாட்டு பொருட்கள் கிடைப்பதை அதிகரிக்கவும், சாமானிய மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை நிலையாக வைக்கவும் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இடையக கையிருப்பில் இருந்து விடுவித்தல், இருப்பு வைக்க வரம்பு விதித்தல், பதுக்கலைத் தடுக்க நிறுவனங்களை கண்காணித்தல், அத்துடன் இறக்குமதி வரியை சமநிலைப்படுத்துதல், இறக்குமதி ஒதுக்கீட்டில் மாற்றங்கள் மற்றும் குறிப்பிட்ட பொருட்களின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகள் போன்ற கொள்கை அளவிலான வர்த்தக முடிவுகளில் தேவையான மாற்றங்கள் ஆகியவை அவற்றில் அடங்கும்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், குறிப்பிட்ட முக்கிய இடுபொருட்கள் மீதான இறக்குமதி வரி மற்றும் கலால் வரியை மத்திய அரசு அவ்வப்போது தக்க அளவீடு செய்து வருகிறது. நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், என்.சி.சி.எப் மற்றும் என்.ஏ.எப்.இ.டி ஆகியவை தக்காளி உற்பத்தி செய்யும் மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்து, டெல்லி-என்.சி.ஆர், ராஜஸ்தான், உத்தரபிரதேசம் மற்றும் பீகார் ஆகிய முக்கிய நுகர்வு மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தவிர, நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதே நேரத்தில் மூலதன செலவினங்களும் கணிசமாக அதிகரித்துள்ளது. 2023-24 நிதியாண்டு மத்திய பட்ஜெட் நிலையான மற்றும் வலுவான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க முதலீட்டுக்கு சாதகமான நடவடிக்கைகளை கொண்டுள்ளது.



பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதை முன்னிட்டு, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களை நேற்று (02.08.2023) மேயர் திருமதி ஆர்.பிரியா மற்றும் வரிவிதிப்பு மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்கள் எம்.ஸ்ரீதரன், ஏ.சந்திரன், திருமதி தேவி கதிரேசன், திருமதி நா.உஷா, ம.கமல், திருமதி ஜெ.புஷ்பலதா, வ.செல்வக்குமார், அ.முருகேசன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



செங்கல்பட்டு மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மையம் கூட்டரங்கில், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் மற்றும் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறும் நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், டி.பாபு, எஸ்.எஸ்.பாலாஜி, மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.